## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

# செயல்முறைத் திட்டம்
# 2017 – 2018

©
தமிழ்நாடு அரசு
2017

## பொருளடக்கம்


| வரிசை எண். | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | குழந்தை நலம் | 3 |
| 3 | மகளிர் நலம் | 7 |
| 4 | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 23 |
| 5 | மூத்த குடிமக்கள் மற்றும் முதியோர் நலன் | 26 |
| 6 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 28 |
| 7 | சமூக பாதுகாப்பு | 34 |
| 8 | சமூக பாதுகாப்பு வளையம் | 48 |

## மானியக் கோரிக்கை எண்.45
## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## செயல்முறைத் திட்டம்
## 2017–2018

### அத்தியாயம் –1

**முன்னுரை**

பெண்கள், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் / பாலூட்டும் தாய்மார்கள், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் முதியோர் மகிழ்வடையும் வண்ணம் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகம் செய்தும், ஏற்கனவே உள்ள திட்டங்களை மேம்படுத்தியும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சமூக நலத் திட்டங்களை சமூக நலம், சமூக பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய மூன்று இயக்குநரகங்கள் வாயிலாக செயல்படுத்தி வருகிறது. மேலும், ஓய்வூதியம் வழங்குதல் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வருவாய்த்துறை மூலம் செயல்படுத்திட இத்துறை ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது.

இப்புதுமையான மற்றும் பயனுள்ள திட்டங்களைத் தவிர, பெண்கள், குழந்தைகள், மூன்றாம் பாலினத்தவர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக பல்வேறு சட்டங்களும், விதிகளும் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மகளிர் ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் மூலமும் இவர்களது பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள், தேவைகள் ஆகியவை உறுதிசெய்யப்படுகிறது.

தற்காத்துக் கொள்ள இயலாத குழந்தைகளுக்கு அவர்களின் உடல்நலம் பேணுதல் மற்றும் தக்க பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும் பாலினப் பாகுபாட்டினைக் குறைக்கவும், வளரிளம் பெண்கள் மற்றும் பெண்களின் நிலையை உயர்த்தி, ஊட்டச்சத்தினை மேம்படுத்தவும், தொடர்ந்து கொள்கைகளை வகுத்து செயல்படுத்துவதில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் செயலாக்கம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## சமூக நலம்

சமூக நல இயக்ககத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் நான்கு வகைப்படும். அவை மகளிர் நலம், குழந்தை நலம், மூத்த குடிமக்கள் நலம் மற்றும் சத்துணவு திட்டமாகும்.

**அ. மகளிர் நலம்**

1) திருமண நிதியுதவித் திட்டங்கள்
2) அரசு சேவை இல்லங்கள்
3) பணிபுரியும் மகளிர் விடுதிகள்
4) பெண்களுக்கான சிறப்புத் திட்டங்கள்
5) கிராமப்புறங்களில் பணிபுரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்
6) பெண்களுக்கு சமூக பாதுகாப்பு சட்டங்களைச் செயல்படுத்துதல்
7) பெண்களுக்கான மாநில வள மையம்
8) தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்.

**ஆ. குழந்தை நலம்**

1) பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைகள் காப்பகம் செயல்படுத்துதல்
2) பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
3) தொட்டில் குழந்தைத் திட்டம்
4) ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

**இ. மூத்த குடிமக்கள் நலம்**

மூத்த குடிமக்கள் இல்லங்களை நடத்த தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்குதல்

**ஈ. சத்துணவு**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

**இத்துறையின் நிதி ஒதுக்கீடு வருமாறு:**

| வ. எண் | திட்டங்கள் | (₹ இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | **2015-2016** | **2016-2017** | **2017-2018** |
| 1. | திட்டத்தில் சேராதது | 12,697.86 | 14,355.81 | **மாநிலச் செலவினம்** |
| 2. | திட்டம் | 2,22,445.63 | 2,35,655.29 | 2,64,430.56 |
| 3. | மத்திய அரசு திட்டங்கள் | 8,554.52 | 9,623.07 | 5,850.42 |
| 4. | மத்திய மற்றும் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 20.26 | 20.27 | 0.01 |
| | **மொத்தம்** | **2,43,718.27** | **2,59,654.44** | **2,70,280.99** |

## அத்தியாயம்–2
# குழந்தை நலம்

### 2.1 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| 1 | திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | 2001–2002 |
| 2 | திட்டத்தின் நோக்கம் | பெண் கல்வியை மேம்படுத்துதல், பெண் சிசுக்கொலையை ஒழித்தல், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப் போக்கை மாற்றுதல் மற்றும் சிறு குடும்ப நெறி முறையை ஊக்குவித்தல். |
| 3 | இத்திட்டத்தில் பயனடைய தகுதிகள் | **1.** பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருக்க வேண்டும். ஆண் வாரிசு இருக்கக் கூடாது.<br>**2.** பெற்றோரில் ஒருவர் **35** வயதுக்குள் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டவராக இருக்க வேண்டும்.<br>**3.** பெற்றோரின் ஆண்டு வருமானம் **₹72,000**க்குள் இருத்தல் வேண்டும்.<br>**4.** திட்டம் **1**–ன் கீழ், குழந்தையின் மூன்று வயதிற்குள்ளும், திட்டம் **2**–ன் கீழ், இரண்டாவது பெண் குழந்தையின் மூன்று வயதிற்குள்ளும் விண்ணப்பித்தல் வேண்டும்.<br>**5.** விண்ணப்பிக்கும் போது பெற்றோர்/அவர்களின் பெற்றோர்கள் தமிழகத்தில் பத்தாண்டுகள் வசித்தவர்களாக இருத்தல் வேண்டும். |
| 4 | உதவித் தொகை | **திட்டம்–1 :**<br>இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிரந்தர வைப்பு நிதியாக **₹50,000** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில், பதினெட்டு ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப்படுகிறது. இத்தொகையானது **01.08.2011** அன்றோ அதற்கு பிறகோ பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது. இந்த வைப்பீட்டுத் தொகையின் இரசீதின் நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.<br>**திட்டம்–2 :**<br>குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண்குழந்தையின் பெயரிலும் ஆரம்ப வைப்பீடாக தலா **₹25,000** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் பதினெட்டு ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப்படுகிறது. இத்தொகையானது **01.08.2011** அன்றோ அதற்கு பிறகோ பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது. இந்த வைப்பீட்டுத் தொகையின் இரசீதின் நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ கோடியில்) | |
| 2013-2014 | 69,000 | 47,226 | 105.01 | 104.98 |
| 2014-2015 | 69,000 | 58,865 | 127.04 | 127.04 |
| 2015-2016 | 69,000 | 50,441 | 140.13 | 125.36 |
| 2016-2017 | 69,000 | 45,530 | 140.13 | 113.93 |
| 2017-2018 | 69,000 | | 140.13 | |

## 2.2 தொட்டில் குழந்தைத் திட்டம்

| | | |
|---|---|---|
| 1 | திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | சேலத்தில் 1992–ல் தொடங்கப்பட்டது. பிறகு 2001ஆம் ஆண்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுப் படுத்தப்பட்டுள்ளது.<br>2011ஆம் ஆண்டில் கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு மேலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. |
| 2 | திட்டத்தின் நோக்கம் | தமிழ்நாட்டில் சில பகுதிகளில் நடைபெற்று வரும் கொடிய செயலான பெண் சிசுக் கொலையைத் தடுத்தல், தத்து வழங்கும் திட்டத்தினை மேம்படுத்துதல். |
| 3 | இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் | பெற்றோர்களால் கைவிடப்பட்ட/ நிராகரிக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையாக இருக்க வேண்டும். |
| 4 | உதவியின் தன்மை | இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகளுக்கு, உரிமம் பெற்ற தத்து நிறுவனங்கள் மூலம் மறுவாழ்வு அளிக்கப்படுகின்றது. |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 10 | 10 | 38.20 | 10.67 |
| 2014-2015 | 10 | 10 | 38.07 | 9.43 |
| 2015-2016 | 10 | 10 | 37.31 | 9.55 |
| 2016-2017 | 10 | 10 | 37.70 | 8.74 |
| 2017-2018 | 10 | | 37.52 | |

**2.3 பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | **1993–1994** |
| 2 | திட்டத்தின் நோக்கம் | பணிபுரியும் மகளிர் மட்டுமல்லாமல் நோய்வாய்ப்பட்டுள்ள மற்றும் ஏழ்மையானக் குடும்பத்திலுள்ள பெண்களுக்கும் அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கும் பணிச் சுமையிலிருந்து விடுவித்து வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக பகல் நேர குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்துவது. |
| 3 | திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் | **1.** பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் சிறார்கள்<br>**2.** வயது வரம்பு : **0–5** வயது |
| 4 | உதவித் தொகையின் விவரம் | குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றிற்கு **₹25,410** மானியமாக வழங்கப்படுகிறது. |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹இலட்சத்தில்) | |
| 2013-2014 | 375 | 250 | 3.82 | 2.27 |
| 2014-2015 | 375 | 250 | 3.82 | 2.54 |
| 2015-2016 | 250 | 250 | 3.83 | 5.09 |
| 2016-2017 | 250 | 150 | 3.82 | 1.52 |
| 2017-2018 | 150 | | 3.82 | |

## 2.4 ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : **1978–1979**

2. திட்டத்தின் நோக்கம் : மேல்நிலைப்பள்ளி வரை பயிலும் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் இலவசமாக வழங்குதல்

3. திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் : விதவையின் குடும்ப வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ₹24,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. உதவித் தொகையின் விவரம் : ஆண்டொன்றுக்கு மாணவர் / மாணவியர் ஒருவருக்கு

| | |
|---|---|
| 1–ஆம் வகுப்பு முதல் 2–ஆம் வகுப்பு வரை | ₹50 |
| 3–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை | ₹125 |
| 6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை | ₹175 |
| 9–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு வரை | ₹300 |
| மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டுக்கு | ₹600 |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 10,000 | 10,000 | 12.45 | 8.50 |
| 2014-2015 | 10,000 | 10,000 | 12.45 | 8.14 |
| 2015-2016 | 10,000 | 10,000 | 12.45 | 10.71 |
| 2016-2017 | 10,000 | 10,000 | 12.45 | 12.45 |
| 2017-2018 | 10,000 | | 12.45 | |

# அத்தியாயம் –3
# மகளிர் நலம்

## திருமண நிதி உதவித் திட்டங்கள்

### 3.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

| | | |
|---|---|---|
| 1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | : | **1989** |
| 2. திட்டத்தின் நோக்கம் | : | பெண்களின் கல்வி நிலையை உயர்த்துதல் மற்றும் ஏழை பெண்களின் திருமணத்திற்கு அவர்களின் பெற்றோர்களுக்கு நிதி உதவி வழங்குதல். |
| 3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் | : | 1) ஏழைக் குடும்பமாக இருத்தல் வேண்டும்.<br>2) குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>3) ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டுமே பயன் பெற இயலும்.<br>4) திருமணத்தின் போது மணப்பெண் 18 வயதும் மணமகனுக்கு 21 வயதும் பூர்த்தி அடைந்திருந்தல் வேண்டும். உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை. |
| 4. மணமகளின் கல்வித் தகுதி | | **திட்டம் – 1**<br>அ. மணமகள் 10–ஆம் வகுப்பு வரை பள்ளியில் படித்து (தேர்ச்சி அல்லது தோல்வி) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தொலைதூரக்கல்வி மூலம் படித்திருந்தால் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ் இருத்தல் வேண்டும்.<br>ஆ. பழங்குடியினராக இருந்தால் 5–ஆம் வகுப்பு வரை படித்திருத்தல் வேண்டும்.<br>**திட்டம் – 2**<br>அ. பட்டதாரிகள் கல்லூரியிலோ அல்லது தொலை தூரக் கல்வி மூலமோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களிலோ படித்து தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>ஆ. பட்டயப் படிப்பு சான்றிதழ் பெற்றவர்கள், தமிழக அரசின் தொழில் நுட்ப கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் படித்து தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| 5. நிதி உதவியின் விவரம் | : | **திட்டம் – 1**<br>₹25,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம்.<br>**திட்டம்–2**<br>₹50,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம். |

6. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

திருமணம் செய்வதற்கு 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை விண்ணப்பிக்கலாம்.

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013–2014 | 1,58,780 | 1,30,035 | 70,161.38 | 56,319.14 |
| 2014–2015 | 1,58,500 | 1,25,029 | 69,964.85 | 59,478.36 |
| 2015–2016 | 1,60,000 | 1,49,111 | 65,170.68 | 62,894.40 |
| 2016–2017 | 1,60,000 | 1,23,449 | 65,170.68 | 68,052.35 |
| 2017–2018 | 1,00,000 | | 67,078.50 | |

**3.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்**

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : 1975

2. திட்டத்தின் நோக்கம் : விதவைகள் மறுமணத்திற்கு நிதியுதவி அளித்தல்.

3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் :
   1. மறுமணத்தின்போது குறைந்தபட்ச வயது 20 ஆக இருக்க வேண்டும். மணமகனின் வயது 40–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
   2. வருமான உச்ச வரம்பு இல்லை
   3. விதவைச் சான்று மற்றும் மறுமண பத்திரிகை மற்றும் வயதுச் சான்று இருக்க வேண்டும்.

4. நிதியுதவியின் விவரம் :

**திட்டம் 1**

₹25,000 வழங்கப்படுகிறது. (இதில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலமாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம் வழங்கப்படும். இதற்கு கல்வித் தகுதி நிபந்தனையில்லை.

**திட்டம் –2**

பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்ற பெண்களுக்கு ₹50,000 நிதியுதவி வழங்கப்

படுகிறது. (இதில் ₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலமாகவும், ₹20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும்) இதனுடன் சேர்த்து 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம் வழங்கப்படும்.

5. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : மறுமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 170 | 112 | 161.80 | 43.36 |
| 2014-2015 | 170 | 75 | 76.25 | 44.05 |
| 2015-2016 | 170 | 121 | 76.25 | 56.90 |
| 2016-2017 | 170 | 52 | 76.25 | 36.65 |
| 2017-2018 | 170 | | 76.25 | |

### 3.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டம்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : 1981

2. திட்டத்தின் நோக்கம் : ஏழை விதவையரின் மகளின் திருமணத்தை நடத்த உதவுதல்.

3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் :
   1. குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
   2. மணப்பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை.

4. நிதி உதவியின் விவரம் :

**திட்டம் – 1**

₹25,000 மின்னணு சேவை பரிமாற்றம் மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம். கல்வித் தகுதி நிபந்தனையில்லை.

**திட்டம்–2**

பட்டதாரிகள் கல்லூரியிலோ அல்லது தொலை தூரக் கல்வி மூலமோ அல்லது

அரசால் அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களிலோ படித்து தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
பட்டயப் படிப்பு தேர்ச்சி பெற்றவர் எனில் தமிழக அரசின் தொழில் நுட்ப கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் படித்து தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
₹50,000 மின்னணு சேவை பரிமாற்றம் மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம்.

5. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு — திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில் தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை விண்ணப்பிக்கலாம்.

| **ஆண்டு** | **திட்டத்தின்** | | **நிதி** | |
|---|---|---|---|---|
| | **இலக்கு** | **சாதனை** | **இலக்கு** | **சாதனை** |
| | | | **(₹ இலட்சத்தில்)** | |
| 2013-2014 | 7,490 | 5,608 | 3,503.07 | 2,186.96 |
| 2014-2015 | 7,770 | 7,011 | 3,771.09 | 3,582.56 |
| 2015-2016 | 7,770 | 7,176 | 3,771.09 | 3,267.80 |
| 2016-2017 | 7,770 | 4,941 | 3,771.09 | 2,603.80 |
| 2017-2018 | 7,770 | | 3,771.09 | |

### 3.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : 1985–1986
2. திட்டத்தின் நோக்கம் : ஆதரவற்ற பெண்ணின் திருமணத்திற்கு நிதி உதவி அளித்தல்.
3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் :
    1. ஆதரவற்ற பெண்ணாக இருத்தல் வேண்டும்.
    2. ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை
    3. திருமண தேதியன்று மணப்பெண் 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.

4. நிதியுதவியின் விவரம் : **திட்டம் –1**

குறைந்தபட்ச கல்வித் தகுதி நிபந்தனையின்றி ₹25,000 மின்னணு சேவை பரிமாற்றம் மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம்.

**திட்டம் –2**

1. பட்டதாரிகள் கல்லூரியிலோ அல்லது தொலை தூரக்கல்வி மூலமோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களிலோ படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. பட்டயப்படிப்பு (Diploma Holders) எனில் தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் படித்து தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
3. ₹50,000 மின்னணு சேவை பரிமாற்றம் மூலம் மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம்

5.விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு : திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை விண்ணப்பிக்கலாம்.

| **ஆண்டு** | **திட்டத்தின்** | | **நிதி** | |
|---|---|---|---|---|
| | | | **இலக்கு** | **சாதனை** |
| | **இலக்கு** | **சாதனை** | **(₹ இலட்சத்தில்)** | |
| 2013-2014 | 1,110 | 717 | 373.75 | 282.36 |
| 2014-2015 | 1,110 | 796 | 373.75 | 355.82 |
| 2015-2016 | 1,110 | 1,150 | 373.75 | 538.95 |
| 2016-2017 | 1,150 | 918 | 373.75 | 438.20 |
| 2017-2018 | 1,150 | | 373.75 | |

**3.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்**

| | | |
|---|---|---|
| **1.** திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | : | **1967 (8.07.2011** முதல் இத்திட்டம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதி உதவி திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது**)** |
| **2.** திட்டத்தின் நோக்கம் | : | பிறப்பு அடிப்படையிலான சாதியின வேறுபாட்டை அகற்றி, கலப்பு திருமணங்களை ஊக்கப்படுத்துதல்**.** |
| **3.**திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் | : | I. ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை<br>II. திருமணத்தின் போது **18** வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்**.** உச்ச வயது வரம்பு இல்லை**.**<br>III. பிரிவு–1: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் / பழங்குடியினராகவும் மற்றொருவர் வேறு சாதியினராக இருக்க வேண்டும்**.**<br>பிரிவு–2: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும் மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருக்க வேண்டும்**.** |
| **4.** நிதியுதவியின் விவரம் | : | **திட்டம்–1**<br><br>கல்வித் தகுதி இல்லை**.**<br>**₹25,000 (₹15,000** மின்னணு பரிமாற்ற சேவை மூலமாகவும் **₹10,000** தேசிய சேமிப்புப் பத்திரமாகவும்**)** மற்றும் **23.05.2016** முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக **1** சவரன் **(8** கிராம்**) 22** காரட் தங்க நாணயம் வழங்கப்படும்**.**<br><br>**திட்டம் 2**<br><br>பட்டதாரிகள் கல்லூரியிலோ/ தொலைதூரக் கல்வி மூலமோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலை கழகங்களிலோ படித்து தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்**.**<br><br>பட்டயப்படிப்பு (Diploma Holders) எனில் தமிழக அரசின் தொழில் நுட்ப கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் படித்து தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்**.** |

₹50,000 (₹30,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலமாகவும், ₹20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும்) மற்றும் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்காக 1 சவரன் (8 கிராம்) 22 காரட் தங்க நாணயம் வழங்கப்படும்.

5. விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு — திருமணமாகி இரண்டாண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 2,450 | 1,409 | 800.00 | 632.56 |
| 2014-2015 | 2,450 | 2,269 | 1,000.00 | 982.32 |
| 2015-2016 | 2,450 | 4,088 | 1,000.00 | 2121.75 |
| 2016-2017 | 2,450 | 2,572 | 1,000.00 | 1308.75 |
| 2017-2018 | 2,450 | | 1,100.41 | |

### 3.6 அரசு சேவை இல்லங்கள்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு மற்றும் இடம் :

| மாவட்டம் | ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு | அனுமதிக்கப்பட்ட உள்ளுறைவோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| காஞ்சிபுரம் (தாம்பரம்) | 1948 – 49 | 505 |
| கடலூர் | 1962 – 63 | 275 |
| தஞ்சாவூர் | 1964 – 65 | 190 |
| திருநெல்வேலி | 1977 – 78 | 130 |
| சேலம் | 1978 – 79 | 130 |
| சிவகங்கை | 1984 – 85 | 130 |
| மதுரை | 2003 – 04 | 150 |
| பெரம்பலூர் | 2013 – 14 | 100 |
| கிருஷ்ணகிரி | 2013 – 14 | 100 |
| | **மொத்தம்** | **1,710** |

2. திட்டத்தின் நோக்கம் : விதவையர், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற ஏழைப் பெண்கள் நலனுக்காக உணவு, தங்குமிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்குதல்.

| | | |
|---|---|---|
| 3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் | : | குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000 க்கு மேற்படக் கூடாது. வயது வரம்பு – 14 முதல் 45 வயது வரை |
| 4. தங்கி பயன்பெறும் கால அளவு | : | சேவை இல்லத்தில் பயிலும் விதவைகள் தங்களது மூன்று குழந்தைகளை தங்கள் பயிற்சி முடியும் வரையில் தங்களுடன் வைத்துக் கொள்ளலாம். ஆண் குழந்தை என்றால் 5 ஆம் வகுப்பு வரையிலும், பெண் குழந்தை எனில் 12 ஆம் வகுப்பு வரையிலும் தங்கி படிக்கலாம். |
| 5. வழங்கப்படும் பயிற்சியின் தன்மை | : | 6–ஆம் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரை கல்வி, தையல், தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணிப்பொறி பயிற்சி, அழகுக் கலைப் பயிற்சி, அரசு இடைநிலை ஆசிரியை பயிற்சி, தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. |
| 6. உணவூட்டுச் செலவினம் | : | 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாதமொன்றுக்கு தலா ₹550 வீதமும், சிறார்களுக்கு மாதமொன்றுக்கு தலா ₹450 வீதமும் வழங்கப்படுகிறது. |
| 7. உடைகளுக்கான படிகள் | : | முதல் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் சிறார்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் நான்கு இணை சீருடை இலவசமாக வழங்கப்படுகின்றது. 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ/மாணவிகளுக்கு இரண்டு இணை சீருடை வழங்கப்படுகின்றது. |
| 8. பிற பயன்கள் | : | i. உள்ளுறைவோர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு படுக்கைச் செலவினம் ₹150 வீதம் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.<br>ii. ஆண்டிற்கு ஒரு உள்ளுறைவோருக்கு மருத்துவ செலவிற்கு ₹25 வீதம் அளிக்கப்படுகிறது.<br>iii. உள்ளுறைவோர் அனைவருக்கும் இலவச காலணிகள் வழங்கும் பொருட்டு ஆண்டுதோறும் ஒருவருக்கு ₹150 வீதம் செலவிடப்படுகின்றது.<br>iv. பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கப்படுகின்றன.<br>v. அரசு சேவை இல்லங்களில் தங்கி பயன்பெறும் வளரிளம் பெண்கள் தன் சுத்தம், சுகாதாரம் பேணும் வகையில் இவர்களுக்கு சுகாதார அணையாடைகள் மற்றும் உள்ளாடைகள் வழங்கப்படுகின்றன.<br>vi. அரசு சேவை இல்லங்களில் தங்கி கல்வி பயின்ற முன்னாள் மாணவியர்களது மேற்படிப்புக்காக |

கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்படுகிறது.

- தொழிற்சார் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு ஆண்டொண்டிற்கு ₹50,000 வீதம்,
- பட்டப்படிப்பு பயிலும் மாணவி ஒருவருக்கு ஆண்டொண்டிற்கு ₹30,000 வீதம்,
- பட்டயப்படிப்பு பயிலும் மாணவி ஒருவருக்கு ஆண்டொண்டிற்கு ₹30,000 வீதம் வழங்கப்படுகிறது
- தமிழ்நாடு திறன்வளர்ப்பு நிறுவனத்தின் மூலம் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது.

**9.** இதர சலுகைகள் : சேவை இல்லங்களில் உள்ள உள்ளுறைவோர்கள் அனைவரும் அருகிலுள்ள இடங்களுக்கு சுற்றுலா சென்றுவர வசதி செய்து தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **திட்டத்தின்** | | | | **நிதி** | |
|---|---|---|---|---|---|---|
| | **இலக்கு** | | **சாதனை** | | **இலக்கு** | **சாதனை** |
| | **வயதடைந்தோர்** | **சிறார்** | **வயதடைந்தோர்** | **சிறார்** | **(₹ இலட்சத்தில்)** | |
| 2013-2014 | 1,245 | 265 | 727 | 53 | 548.64 | 488.27 |
| 2014-2015 | 1,245 | 265 | 781 | 101 | 612.13 | 319.00 |
| 2015-2016 | 1,245 | 265 | 490 | 27 | 528.08 | 467.72 |
| 2016-2017 | 1,245 | 265 | 509 | 39 | 631.48 | 553.10 |
| 2017-2018 | 1,245 | 265 | | | 524.43 | |

### 3.7 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

**1.** திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு மற்றும் இடம் :

| ஆரம்பிக்கப் பட்ட ஆண்டு | மாவட்டம் | அனுமதிக்கப் பட்ட உள்ளுறைவோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **1980 – 81** | சென்னை | **75** |
| **1980 – 81** | மதுரை | **50** |
| **1980 – 81** | கிருஷ்ணகிரி (ஒசூர்) | **50** |
| **1981 – 82** | திருச்சிராப்பள்ளி | **50** |
| **1981 – 82** | தூத்துக்குடி | **50** |
| **1987 – 88** | கடலூர் | **30** |
| **1987 – 88** | புதுக்கோட்டை | **35** |

| | | |
|---|---|---|
| 1992 – 93 | சென்னை | 75 |
| 2013 – 14 | காஞ்சிபுரம் (3) | 150 |
| 2013 – 14 | திருவள்ளூர் | 50 |
| 2013 – 14 | சென்னை (6) | 300 |
| 2013 – 14 | தஞ்சாவூர் | 50 |
| 2013 – 14 | திருப்பூர் | 50 |
| 2013 – 14 | பெரம்பலூர் | 50 |
| 2013 – 14 | விழுப்புரம் | 50 |
| 2013 – 14 | வேலூர் | 50 |
| 2013 – 14 | கோயம்புத்தூர் | 50 |
| 2013 – 14 | சேலம் | 50 |
| 2013 – 14 | திருச்சிராப்பள்ளி | 50 |
| 2013 – 14 | திருநெல்வேலி | 50 |
| 2013 – 14 | சிவகங்கை | 50 |
| | **மொத்தம்** | **1,415** |

2. திட்டத்தின் நோக்கம் : குடும்பத்தை விட்டு வெளியூரில் பணிபுரியும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பெறும் மகளிருக்கு உணவுடன் பாதுகாப்பான தங்கும் வசதி அளித்தல்.

3.திட்டத்தில் பயன் பெறுவதற்கான தகுதிகள் : மாதவருமானம் சென்னையில், ₹25,000–த்திற்குள்ளும், இதர மாவட்டங்களில் ₹15,000–த்திற்குள்ளும் இருத்தல் வேண்டும்.

4. தங்கி பயன்பெறும் கால அளவு : மூன்றாண்டுகள்.
மூன்றாண்டுகளுக்குமேல், பயனாளியின் தேவை, தங்கிப் பயிலும் காலத்தில் நடந்து கொண்ட விதம் ஆகியவற்றின் அடிப்படையில் இல்லக் காப்பாளரின் பரிந்துரையின் பேரில் அனுமதிக்கலாம்.

5. மற்ற நிபந்தனை : உள்ளுறைவாளர் வாடகையாக சென்னையில் மாதமொன்றுக்கு ₹300ம் இதர மாவட்டங்களில் ₹200ம் செலுத்த வேண்டும். உணவு மற்றும் மின் கட்டணம் விகிதாச்சார அடிப்படையில் பகிர்மானம் செய்யப்படும்.

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 415 | 315 | 92.04 | 250.43 |
| 2014-2015 | 1,415 | 538 | 253.33 | 69.47 |
| 2015-2016 | 1,415 | 487 | 118.64 | 204.02 |
| 2016-2017 | 1,415 | 487 | 164.72 | 91.59 |
| 2017-2018 | 1,415 | | 117.46 | |

## 3.8 பெண்களுக்கான சிறப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | : | **1978–1979** |
| திட்டத்தின் நோக்கம் | : | பயிற்சி நிலையங்கள் மூலம் ஏழை மகளிருக்கு வேலை வாய்ப்புகள் அளித்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல். |

| வ.எண் | பயிற்சி நிலையம் / உற்பத்திப் பிரிவு | எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1.** | **பனை ஓலை பயிற்சி மையம்** | | |
| | 2012-2013 | 2 | 30 |
| | 2013-2014 | 2 | 30 |
| | 2014-2015 | 2 | 30 |
| | 2015-2016 | 2 | 30 |
| | 2016-2017 | 2 | 30 |
| **2.** | **தையல் பயிற்சி மையம்** | | |
| | 2012-2013 | 25 | 640 |
| | 2013-2014 | 23 | 445 |
| | 2014-2015 | 16 | 210 |
| | 2015-2016 | 13 | 245 |
| | 2016-2017 | 13 | 245 |
| **3.** | **துணி பொம்மை தயாரிப்பு பயிற்சி மையம்** | | |
| | 2012-2013 | 1 | 8 |
| | 2013-2014 | 1 | 8 |
| | 2014-2015 | 1 | 10 |
| | 2015-2016 | 1 | 10 |
| | 2016-2017 | 1 | 10 |

**பயிற்சி நிலையம் மற்றும் உற்பத்தி மையம்**

| ஆண்டு | நிதி | |
|---|---|---|
| | இலக்கு | சாதனை |
| | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 215.14 | 213.58 |
| 2014-2015 | 267.10 | 191.43 |
| 2015-2016 | 249.62 | 196.09 |
| 2016-2017 | 348.65 | 212.38 |
| 2017-2018 | 207.12 | |

இச்செலவு சம்பளம் மற்றும் பயிற்சி உதவித் தொகை முதலியவற்றை குறித்ததாகும்.

தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

| வ.எண் | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1.** | **எழுதுபொருள் மற்றும் தையல் சங்கங்கள்** | | |
| | 2012-2013 | 15 | 768 |
| | 2013-2014 | 15 | 778 |
| | 2014-2015 | 15 | 1,017 |
| | 2015-2016 | 15 | 1,017 |
| | 2016-2017 | 15 | 1,017 |
| **2.** | **தையல் கூட்டுறவு சங்கங்கள்** | | |
| | 2012-2013 | 80 | 50,000 |
| | 2013-2014 | 80 | 70,370 |
| | 2014-2015 | 80 | 73,047 |
| | 2015-2016 | 80 | 73,047 |
| | 2016-2017 | 80 | 73,047 |
| **3.** | **ஏனைய சங்கங்கள் ( சாக்கு கட்டி, எழுது பொருட்கள், கயிறு தயாரிக்கும் மற்றும் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்)** | | |
| | 2012-2013 | 3 | 1,015 |
| | 2013-2014 | 3 | 1,743 |
| | 2014-2015 | 3 | 1,743 |
| | 2015-2016 | 3 | 1,743 |
| | 2016-2017 | 3 | 1,743 |

தொழிற் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிட கண்காணிப்புப் பிரிவு அமைத்தல்

| ஆண்டு | நிதி | |
|---|---|---|
| | இலக்கு | சாதனை |
| | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 256.08 | 271.84 |
| 2014-2015 | 261.04 | 130.90 |
| 2015-2016 | 209.10 | 158.31 |
| 2016-2017 | 243.16 | 228.13 |
| 2017-2018 | 245.81 | |

### 3.9 சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : **1979 –1980**

2. திட்டத்தின் நோக்கம் : சமுதாயத்தில் நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண் ஆகியோர் சுயதொழில் செய்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள உதவும் வகையில் தையல் இயந்திரம் இலவசமாக வழங்குதல்.

3. திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் : 20 முதல் 40 வயது வரையிலுள்ள தையல் வேலை தெரிந்த ஆதரவற்ற விதவைகள், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண் ஆகியோர்.
தையல் தெரிந்திருக்க வேண்டும் (இத்திட்டம் 26.07.2011 முதல் முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது).

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி (₹ இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 2012–2013<br>2013–2014 | 5,500 | 3,505 | 190.00 | 180.00 |
| 2016–2017 | 5,500 | 1,626 | 135.00 | 135.00 |
| 2017–2018 | 5,500 | | 135.00 | |

### 3.10 கிராமப்புறங்களில் பணிபுரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு சமூக நல வாரியம் மூலம் மானியம் வழங்குதல்

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : **1990–1991**

2. திட்டத்தின் நோக்கம் : கிராமப்புறங்களில், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக, பணிபுரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் மானியம் வழங்குதல்.

3. இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் : பதிவு பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறைந்தது 3 வருடங்கள் சமூகநலப் பணிகள் செய்திருக்க வேண்டும்

4. வழங்கப்படும் உதவியின் விவரம் : உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் அறைகலன்கள் வாங்குவதற்கு

தகுதியுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013-2014 | 200 | 200 | 10.00 | 10.00 |
| 2014-2015 | 200 | 200 | 10.00 | 10.00 |
| 2015-2016 | 200 | 200 | 10.00 | 10.00 |
| 2016-2017 | 200 | 200 | 10.00 | 10.00 |
| 2017-2018 | 200 | | 10.00 | |

**3.11 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005**

1.. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : **2005**

2. திட்டத்தின் நோக்கம் : குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாத்தல் மற்றும் குடும்பத்திற்குள்ளேயே பெண்களுக்கு பாதுகாப்பான, அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த உதவுதல்

**3.12 வரதட்சணைத் தடுப்புச் சட்டம் , 1961**

1. திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு : இந்த சட்டம் **1961**ல் நடைமுறைபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின் விதிகள் தமிழ்நாட்டில் **2004** ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. திட்டத்தின் நோக்கம் : வரதட்சணை வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் (ம) வரதட்சணையை ஒழித்தல்

**3.13 தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம்**

1. வாரியம் துவங்கப்பட்ட ஆண்டு : **2008–2009**

2 வாரியத்தின் நோக்கம் : மூன்றாம் பாலினத்தவர்க்கு மறுவாழ்வு மற்றும் சமுதாயத்தில் சம உரிமை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்

3 வாரியத்தின் உறுப்பினராக தேவையான தகுதிகள் :

1. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டை வைத்திருத்தல் வேண்டும்.

4 வழங்கப்படும் உதவிகள் :

- அடையாள அட்டை
- உணவுப் பொருள் வழங்கும் அட்டை
- வாக்காளர் அடையாள அட்டை
- வீட்டுமனைப் பட்டாக்கள்
- மருத்துவ வசதிகள்
- இலவச வீட்டு வசதி அமைத்தல்
- கல்விக்கான கடன்
- திறன் வளர்க்கும் பயிற்சிகள்
- குறுகிய கால தங்கும் இல்லங்கள்

| **ஆண்டு** | **நிதி** | |
|---|---|---|
| | **இலக்கு** | **சாதனை** |
| | **(₹ இலட்சத்தில்)** | |
| 2015–2016 | 100.00 | – |
| 2016–2017 | 100.00 | 136.95 |
| 2017–2018 | 100.00 | |

## 3.14 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்க்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

| | |
|---|---|
| திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | 2012–2013 |
| திட்டத்தின் நோக்கம் | உழைத்து சம்பாதிக்க இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஏழை, ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்க்கு உதவி புரிதல் |
| தகுதிகள் | 1. 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்<br>2. மூன்றாம் பாலினர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை வைத்திருத்தல் வேண்டும்.<br>3. உடல் ரீதியாக உழைத்து சம்பாதிக்க இயலாத மூன்றாம் பாலினத்தவராக இருத்தல் வேண்டும்.<br>4. குடும்ப உறுப்பினர்களிடமோ அல்லது வேறு எந்த நபர்களிடமோ உதவி பெறாத மூன்றாம் பாலினத்தவராக இருத்தல் வேண்டும். |
| வழங்கப்படும் உதவிகள் | மாதம் ₹1,000 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படும் (வருவாய்த்துறை மூலமாக ) |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| | | | (₹ இலட்சத்தில்) | |
| 2013–2014 | 1,069 | 743 | 128.28 | 89.16 |
| 2014–2015 | 1,000 | 933 | 100.00 | 98.66 |
| 2015–2016 | 1,000 | 957 | 120.00 | 114.48 |
| 2016–2017 | 1,000 | 1,000 | 120.00 | 115.00 |
| 2017–2018 | 1,000 | | 120.00 | |

*******

**அத்தியாயம்–4**

## 4.1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1 | தொடங்கப்பட்ட நாள் | **01.07.1982** | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டமானது ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் **2** முதல் **5** வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் **5** முதல் **9** வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது. |
| | | **15.09.1982** | நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டது. |
| | | **15.09.1984** | **10** வயது முதல் **15** வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டது. |
| | | **03.06.1989** | **15** நாட்களுக்கு ஒரு முறை சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு முட்டை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | | **12.09.2001** | பயிறு வகைகள் – கொண்டைக் கடலை / பச்சைப் பயிறு மற்றும் வேக வைத்த உருளைக் கிழங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | | **20.03.2013** | ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முன்னோடி வட்டாரத்தில் புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. |
| | | **15.08.2014** | புதிய வகை கலவை சாதம் மற்றும் நான்கு வகை மசாலா முட்டை வழங்கும் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. |

2 நோக்கங்கள்

- அனைவருக்கும் ஆரம்ப கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்
- கிராமப்புறங்களில் வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்தினை வழங்குதல்
- ஏழ்மையில் வாடும் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதை முறைப்படுத்துதல் மற்றும் முறையான கல்வி வழங்குதல்
- வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்

3 திட்டத்தின் நலப்பணிகள்

i. **5** முதல் **9** வயதிற்குட்பட்ட துவக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் **10** முதல் **15** வயது வரையிலான உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு **5** நாட்கள் வீதம் ஆண்டிற்கு **220** நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே சூடான, சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

ii. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தைத் தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

iii. 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராமும் என்ற அளவில் சத்துணவு சமைப்பதற்காக அரிசி பயன்படுத்தப்படுகிறது.

iv. பதிவுபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சூடான சமைத்த ஊட்டச்சத்து மிக்க கலவை சாதத்துடன் குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு 46 கிராம் எடையுள்ள முட்டையில் 6.12 கிராம் புரதமும், 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது. முட்டைக்கான செலவினம் முழுவதும் மாநில அரசே ஏற்கிறது.

v. முட்டை உண்ண விருப்பமில்லாத குழந்தைகளுக்கு, மாற்றாக 100 கிராம் எடையுள்ள வாழைப்பழம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 1.2 கிராம் புரதமும், 116 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கிறது.

vi. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வரும் செவ்வாய் கிழமைகளில் 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை, புலவுடன் சேர்த்து, ‘கொண்டைக்கடலை புலவாக’ வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும் 3. 42 கிராம் புரதமும் கிடைக்கிறது.

vii. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வாரங்களில் வரும் வியாழக் கிழமைகளில் 20 கிராம் பச்சைப்பயறு ‘சுண்டலாக’ வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும் 4.80 கிராம் புரதமும் கிடைக்கிறது.

viii. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில் 20 கிராம் உருளைக்கிழங்கு மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கிறது. 20 கிராம் உருளைக்கிழங்கிற்கான கொள்முதல் தொகையினை 16 பைசாவிலிருந்து 40 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ix. சுகாதார தலையீட்டின் ஒரு பகுதியாக, அயோடின் மற்றும் இரும்புச்சத்து குறைபாட்டினை களையும் பொருட்டு இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, சத்துணவில் பயன்படுத்தப்படுவதால் அயோடின் குறைபாடு நீக்கப்பட்டு முன்கழுத்து கழலை நோய் வருவது தடுக்கப்படுகிறது.

x. முக்கியமான சிறப்பு தினங்களின் போது, வெல்லம் மற்றும் நெய் பயன்படுத்தி செய்யப்பட்ட இனிப்பு பொங்கல் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

| ஆண்டு | செயலாக்க சாதனை | | நிதி (₹கோடியில்) | |
|---|---|---|---|---|
| | மையங்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | இலக்கு | சாதனை |
| 2013–2014 | 42,490 | 53,52,111 | 1,588.65 | 1,473.54 |
| 2014–2015 | 42,619 | 54,62,978 | 1,622.48 | 1,522.34 |
| 2015–2016 | 42,970 | 55,15,613 | 1,470.53 | 1,428.34 |
| 2016–2017 | 43,047 | 55,05,847 | 1,644.52 | 1,511.15 |
| 2017–2018 | 43,143 | 53,31,211 | 1,687.37 | |

**4.2 அங்கன்வாடிகளில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

**1.** திட்டம் தொடங்கப்பட்ட நாள் : ஊரகப் பகுதிகளில் **01.07.1982**
நகர்புறங்களில் **15.09.1982**

**2.** திட்டத்தின் நோக்கம் : **54,439**அங்கன்வாடி மையங்களிலுள்ள **2+** வயது முதல் **5+** வயது வரையுள்ள சிறார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சத்துணவு அளித்தல் மூலம் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல்

| ஆண்டு | திட்ட இலக்கு | திட்ட சாதனை (சத்துணவு) | நிதி (₹ இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | அலகு | எண்ணிக்கை | இலக்கு | சாதனை |
| 2013–2014 | 54,439 அங்கன்வாடி மையங்கள் | 11,04,148 | 8,196.15 | 6,210.23 |
| 2014–2015 | 54,439 அங்கன்வாடி மையங்கள் | 11,04,148 | 8,061.13 | 6,690.74 |
| 2015–2016 | 54,439 அங்கன்வாடி மையங்கள் | 11,07,738 | 8,999.12 | 8,311.04 |
| 2016–2017 | 54,439 அங்கன்வாடி மையங்கள் | 13,97,465 | 8,999.12 | 7,826.07 |
| 2017–2018 | 54,439 அங்கன்வாடி மையங்கள் | 13,58,679 | 8,853.23 | |

## அத்தியாயம் –5
# மூத்த குடிமக்கள் மற்றும் முதியோர் நலன்

### 5.1 மாநில அரசு மானியம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு | : | 1991–1992 |
| 2. | திட்டத்தின் நோக்கம் | : | வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உறைவிடம், பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். |
| 3. | திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் | : | ➢ ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கான இல்லங்கள் நடத்திடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சங்க சட்டம் / அறக்கட்டளை சட்டம் / கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்.<br>➢ தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்தக் குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகள், 2009–ன் கீழ் இம்முதியோர் இல்லங்கள் பதிவு செய்திருக்க வேண்டும். |
| 4. | உதவித் தொகையின் விவரம் | : | 40 பயனாளிகளைக் கொண்ட ஓர் இல்லத்திற்கு ஒரு வருடத்திற்கு ₹5.60 இலட்சம் மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.<br>₹1.12 இலட்சம் நிறுவனத்தின் பங்காக செலவிடப்பட வேண்டும். |
| 5. | மொத்த எண்ணிக்கை | : | 21 இல்லங்கள் |

| ஆண்டு | திட்டத்தின் | | நிதி (₹ இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 2013-2014 | 1,120 | 611 | 64.00 | 31.91 |
| 2014-2015 | 1,120 | 665 | 64.00 | 34.93 |
| 2015-2016 | 1,120 | 845 | 64.00 | 46.04 |
| 2016-2017 | 1,120 | 709 | 64.00 | 75.13 |
| 2017-2018 | 1,120 | | 64.00 | |

## 5.2 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | திட்டம் தொடங்கிய ஆண்டு | 2011–2012 |
| 2. | திட்டத்தின் நோக்கம் | முதியோர், பாதுகாப்பு தேவைப்படும் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான சிறந்த சூழலை அமைத்து கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். |
| 3 | திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் | ➢ ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கான இல்லங்கள் நடத்திடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சங்க சட்டம் / அறக்கட்டளை சட்டம் / கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்.<br>➢ இச்சிறப்பு இல்லங்கள் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ன் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்.<br>➢ தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களுக்கான பராமரிப்பு மற்றும் நல விதிகள், 2009–ன் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும். |
